Page - (393)

**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்**

**அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு. இரா.வாழவந்தான்.,பி.இ,**

# திட்ட அனுமதி

**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

ந.க.எண். **4789/2020**/உ.திரு நாள்: **01.12.2021**
தி.அ. எண். **414 /2021**
உள்ளாட்சியின் பெயர்: கோயம்புத்தூர் மாநகராட்சி

பொருள் : குடியிருப்பு கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி –பேரூர் வட்டம்- மேற்கு மண்டலம்- வடவள்ளி கிராமம் - க.ச. எண்-107/2 –ல் 1250.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனை இடத்திற்கு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச ஸ்டில்ட் + 5 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்க நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இசைவளிக்கப்பட்டுள்ளது - திட்ட அனுமதி வழங்குதல் - சம்மந்தமாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.4085/2021/TCP-3/BA, நாள்-31.08.2021
2. மனுதாரர் திரு.M/s Shree Kumaran Developers Coimbatore அவர்களின் விண்ணப்ப நாள்- 06.12.2019& 25.06.2021
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் - 03.02.2021,30.06.2021& 11.08.2021
4. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.28.03.2012.
5. அரசாணை (நிலை) எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.05.2017.
6. அரசாணை (நிலை) எண்.1. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.05.01.2021
7. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
8. அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
9. அரசாணை (நிலை) எண்.54, நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.03.2020
10. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.27.06.2012.

12. நகர் ஊரமைப்பு ஆணையகம், அலுவலகத்தின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/பொ1, நாள் 22.09.2017.
13. நகர் ஊரமைப்பு ஆணையகம், அலுவலகத்தின் சுற்றறிக்கை ந.க.எண்.14227/2017/பி4, நாள் 14.12.2017.
14. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அலுவலகத்தின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/TCP3, நாள் 05.02.2020.
15. மனுதாரர் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் 12.10.2021 மற்றும் 30.11.2021

*******

**உத்தரவு:**

பார்வை 1 ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு அடிப்படையில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாநகராட்சி, [illegible], கள்ளி கிராமம், க.ச.எண்.107/2 ல் 1250.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனை இடத்திற்கு, மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச ஸ்டில்ட் + 5 தளத்துடன் கூடிய குடியிருப்பு கட்டுமானம் அமையும் மனை இடத்திற்கு, 'A' முதல் 'D' வரை எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையவுள்ள குடியிருப்பு கட்டுமானத்திற்கு, **க.வ./ந.வ.இ.எண்.330/2021** என கட்டிட வரைபடத்திற்கு, என எண்ணிட்டு திட்ட அனுமதி வழங்க தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்டுள்ள கட்டுமானத்தின் பரப்பளவு விவரம்

**மனையின் பரப்பளவு :**

As per Document - 1272.00ச.மீ

As per Patta - 1250.00ச.மீ

| Floor Name | Total Built-up Area ($m^2$) | Non FSI area ($m^2$) | Total FSI Area ($m^2$) | Usage |
|---|---|---|---|---|
| Stilt floor | 670.57 | 644.42 | 26.14 | Parking, EB Room |
| First floor | 644.42 | - | 644.42 | 5 குடியிருப்புகள் |
| Second floor | 644.42 | - | 644.42 | 5 குடியிருப்புகள் |
| Third floor | 644.42 | - | 644.42 | 5 குடியிருப்புகள் |
| Fourth floor | 644.42 | - | 644.42 | 5 குடியிருப்புகள் |
| Fifth floor | 644.42 | - | 644.42 | 5 குடியிருப்புகள் |
| Head room | 30.77 | 30.77 | - | |
| **Total** | **3923.44** | **675.19** | **3248.25** | **25 குடியிருப்புகள், Parking, EB Room** |

**FSI Area= 3248.25 ச.மீ**

மேற்கண்ட குடியிருப்புக் கட்டிட உபயோகக் கட்டுமானத்திற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | அபிவிருத்தி கட்டணம் | ரூ. | 84,000/- | நாள் | 07.10.2021 |
| 2) | நன்னிலைத்தொகை | ரூ. | 2800/- | நாள் | 11.10.2021 |
| 3) | I&A கட்டணம் | ரூ. | 9,26,000/- | நாள் | 11.10.2021 |
| 4) | Security கட்டணம் | ரூ. | 4,63,000/- | நாள் | 07.10.2021 |
| 5) | Display Charges | ரூ. | 1500/- | நாள் | 07.10.2021 |
| 6) | CCC கட்டணம் | ரூ. | 43000/- | நாள் | 07.10.2021 |
| 7) | OSR-Charges | ரூ. | 9,03,000/- | நாள் | 29.11.2021 |
| 8) | Shelter Fund | ரூ. | 2,58,000/- | நாள் | 29.11.2021 |
| 9) | premium FSI | ரூ. | 27,02,000/- | நாள் | 29.11.2021 |

மேற்கண்ட உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு பார்வை-13 ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படியும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் **திட்ட அனுமதி எண். :414/2021** என்ற எண்ணில் 01.12.2021 முதல் 30.11.2026 வரை 5 (ஐந்து) வருட காலத்திற்கு திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

| வ.எண் | சிறப்பு நிபந்தனைகள் |
|---|---|
| 1. | மனுதாரரின் மனையிடத்திற்கான 10% OSR பரப்பளவு இடத்தினை நகர் ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்-4367/2019 ந.ஊ2, நாள்-05.02.2020-ன்படி 10% OSR பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பு தொகையை மனுதாரர் நாள்-29.11.2021-ல் செலுத்தியுள்ளார். |
| 2. | It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations. |
| 3. | மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 4. | Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the |

structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects /licensed surveyors and the structural engineer associated with the development shall ensure the developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction

5. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the Water Act 1974 for discharge of sewage.

6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை படைத்தவர் என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையைப் தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதி படைத்த நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல

7. The provision in the G.O.(Ms) No. 17 H & UD (UD 4) (3) department dated 5.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

8. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019 ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட உத்தேசங்கள், கட்டுமானப்பணி Plinth Level ல் இடம் நேராய்வு செய்ய மனுதாரர் விண்ணப்பித்து, கட்டுமானப்பணி தொடர Construction Continuance Certificate இவ்வலுவலகத்தில் பெறப்படல் வேண்டும். மேலும் கட்டுமானப்பணி முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பின்னர் (பணிமுடிவு சான்று) Completion Certificate கோரி மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பித்து சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

## பொது நிபந்தனைகள்

1. திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (i)திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ
   (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.
4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.
   (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.
5. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.
6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.
7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப் படவேண்டும்.
   (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்
   (iii) உத்தேசம் குறித்து கழிவு நீர வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.
8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.
9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.
12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.
13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.
14. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

398

15. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

16. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

17. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

18. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு/ வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர்,
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர்

1/12/21

**இணைப்பு**
முத்திரையிடப்பட்ட
வரைபடங்களின் தொகுப்பு வரைபடம் -2

<u>பெறுநர்</u>
1. ஆணையாளர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர் - 641001.

2. Chair Person,
   Tamilnadu Real Estate Regulatory Authority,
   CMDA Tower - II 1st Floor , No.1A,
   Gandhi Irwin Bridge Road,
   Egmore ,Chennai - 600 008

**<u>நகல் மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)</u>**
M/s. Shree Kumaran Properties Developers,
144,V.R.K. Complex, Ground floor,
Maruthamalai Road, Vadavalli, Coimbatore-41
Cell no- 98422-42336
Email.id. shreekumaranproperty@gmail.com

**உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாநகராட்சி**

**திட்ட அனுமதி உத்தரவு**

**(பிரவு 49, நகர் ஊரமைப்பு சட்டம் 1971)**

| | | | |
|---|---|---|---|
| **கட்டிட விண்ணப்ப எண்** | : 162/CP/22-23/0019740 | நாள்:12-Aug-2022 | |
| **பி.ஏ எண்** | : 162/BPA/2022/02882 | | |
| **கட்டிட அனுமதி எண்** | : 162/BL/2022/03/016/02673 | | |
| **திட்ட அனுமதி எண்** | : 0476/2022/MH1/W | | |
| **மனுதாரர் பெயர்** | : திரு ஶ்ரீ குமரன் ப்ராபர்ட்டி டெவலப்பர் | | |
| **முகவரி** | : SITE NO 1,ஶ்ரீராம் அவென்யூ , வார்டு-016, மேற்கு மண்டலம் | | |
| **மனுவின் நாள்** | : 19-May-2022 | | |
| **நில / கட்டிட விளக்கம்** | : கட்டிடம் /கூடுதல் கட்டிடம் /புதுப்பித்து கட்டிக்கொள்ள | | |
| **தொகுதி** | : | பகுதி | : |
| **கதவு/மனை எண்** | : 1 | நகரளவுஎண் | : 107 |
| **தெரு** | : ஶ்ரீராம் அவென்யூ | | |
| **அபிவிருத்திக் கட்டணம்** | : செலான் நெ: 162/CP/22-23/0023031 கட்டணம்: | நாள் : 30-May-2022 | |

முழுமைத்திட்டத்தில் கண்டுள்ள கட்டுபாட்டுக்குட்பட்டு, மேற் காணும் நகரளவு எண் 107, ஶ்ரீராம் அவென்யூ , வார்டு-016, மேற்கு மண்டலம் தெருவில் கட்டிடம் கட்டிக் கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைபேரில் 12-Aug-2022 முதல் 11-Aug-2027 வரை ஐந்து ஆண்டு காலத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனை:**

(1) அரசாணை எண் 154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2020 அரசால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வு உத்தரவுப்படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

(2) இந்த திட்ட அனுமதி தவறான தகவல்கள் பேரில் வழங்கப்பட்டிருந்தால் அதை தள்ளுபடி செய்யவோ, நிறுத்தி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

பெறுபவர்,

ஶ்ரீ குமரன் ப்ராபர்ட்டி டெவலப்பர்
SITE NO 1,ஶ்ரீராம் அவென்யூ , வார்டு-016, மேற்கு
மண்டலம்

**ஆணையாளர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**
**மேற்கு மண்டலம்**

THE SEAL OF THE COIMBATORE CITY MUNICIPAL CORPORATION * COIMBATORE *